★ ★ பிந்திய பதிப்பு
Registered as a Newspaper in Ceylon  விலை சதம் 10

# ஈழநாடு


மலர் 7  EELA NADU  இதழ் 72
National Tamil Daily  தேசிய தினசரி
(24-4-65)
விசுவாவசு சித்திரை 12  துலஹஜ் பிறை 21  சனிக்கிழமை

## கள்ள நாணயம் தயாரித்தனர்

மாவிட்டபுரம், வெள்ளி

அச்சுவேலியிலுள்ள ஒரு வீட்டில் இருவர் 50 சத கள்ள நாணயங்கள் தயாரித்துக்கொண்டிருக்கையில் பொலிஸாரிடம் கையும்மெய்யுமாகப் பிடிபட்டனர்.

காங்கேசன்துறை தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு சி. ஏ. போனி தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி அச்சுவேலி வன்னியப்பா செல்வராசாவின் வீட்டைச் சோதனையிட்டபோது நாகமணி நவரத்தினம் இரத்தினம் ஸ்ரீஸ்கந்தராசா என்ற இரு நபர்கள் கள்ள நாணயங்கள் தயாரித்துக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டனர். கள்ள நாணயங்கள் தயாரிப்பதற்காக உபயோகிக்கப்பட்ட கருவிகளும் பறிமுதல்செய்யப்பட்டன.




சிம்மாசன பிரசங்கத்துக்கு

# நன்றி தெரிவிக்கும் பிரேரணை 42 வாக்குகளால் வெற்றி

## எதிர்க்கட்சியினரின் ஒன்பதாவது திருத்தப் பிரேரணை வாபஸ்

கொழும்பு, வெள்ளி

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணை 42 அதிகப்படியான வாக்குகளால் இன்று பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டது. எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த 10 திருத்தப் பிரேரணைகளும் தோல்வியடைந்தன.

எதிர்க்கட்சியினரின் பொதுத் திருத்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 54 பேர் பிரேரணைக்குச் சாதகமாகவும் 96 பேர் பாதகமாகவும் வாக்களித்தனர். இதன்பின்னர் எதிர்க்கட்சியின் திருத்தப் பிரேரணைகள் தனித்தனியாகப் பரிசீலிக்கப்பட்டன.

தேசியஅரசாங்கத்தை அமைப்பதற்கு மக்களின் அனுமதியைப்பெறவில்லையென்ற 1-வது திருத்தப் பிரேரணையும் விலைவாசி உயர்வு அத்தியாவசியத் தேவைகள் பற்றிய இரண்டாவது பிரேரணையும் தனித்தனியே வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஒவ்வொரு முறையும் 54-96 என்றகணக்கில் வாக்கெடுப்பு இருந்தது. இதைத் தொடர்ந்து ஏனைய திருத்தப் பிரேரணைகள் "ஆம்" "இல்லை" என்ற வாய்மொழி மூலமே கணக்கெடுக்கப்பட்டன.

கைலஞ்ச ஊழலில் கண்டுபிடிக்கப்பட்டவர்களுக்கு அடிப்படை உரிமைகள் இல்லாமல்

(6-ம் பக்கம் பார்க்க)

## தேசிய அரசாங்கம் அமைத்தது பெருவாய்ப்பே

### பிரதமர் டட்லி உரை

கொழும்பு, வெள்ளி

"எனது கட்சி மட்டுமே அரசாங்கத்தை நிறுவக் கூடியதாக பெரும் பான்மை பலம் கிடைக்காது, தேசிய அரசாங்கத்தை அமைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது எனது பெரும் பேறேயாகும். இதற்காக நான் நாட்டு மக்களுக்கு நன்றியுடையவனுவேன்" என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா விவாதத்தை அரசாங்க தரப்பில் முடித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா மேலும் குறிப்பிட்டதாவது:-

இந்த நாட்டில் வாழும் எல்லா இன, சமூக, மத மக்களும் தங்கள் உரிமைகளுடன் வாழக் கூடியதாக சமூக வேறுபாடுகளை நீதியானதும் நேர்மையானதுமான வழியில் தீர்த்து வைக்கும் பெரும்பணி கிடைத்திருப்பதை தவப்பயன் என்றே கருதுகி



றேன், சமூகங்களிடையே ஒற்றுமையும், சௌஜன்யசூழ்நிலையும், ஏற்பட்டால் மட்டுமே பொருளாதார சுதந்திரம் அடையமுடியும். இதைமனதில் கொண்டு நான் செயலாற்றுகிவேன்'

பல இன, மத மக்களையும்

(6-ம் பக்கம் பார்க்க)

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட கைத்தொழில் சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாம் பரிசு
08 J 0589 ரூபா 28,430
இரண்டாம் பரிசு
01 A 0218 ரூபா 8,120
மூன்றும் பரிசு
05 Z 0911 ரூபா 4,060

(3-ம் பக்கம் பார்க்க)

## டாக்டர் நாகநாதன் பார்லிமெண்டில் அழுதார்!!

கொழும்பு, வெள்ளி

"நான் பார்லிமெண்டில் பேசுவது இதுதான் கடைசி முறையாக இருக்கலாம். எனவே எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திலும் சிறிது



கூடிய நேரம் தர அனுமதிப்பீர்கள் என நம்புகிறேன்" என நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் இன்று பார்லிமெண்டில் அழுதுகொண்டே கூறினர்.

தனக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முழுவதும் பேசிய பின்னர், தான் இன்னும் சிறிது நேரம் பேசவேண்டும் எனவும் தனக்கு அனுமதி தருமாறும் டாக்டர் நாகநாதன் சபாநாயகரைக் கேட்டுக் கொண்டார். டாக்டர் நாகநாதன் அழுதுகொண்டே கூறினர்;

"நான் பார்லிமெண்டில் பேசுவது சிலவேளை இதுவே கடைசித் தடவையாக இருக்கலாம், மிக விரைவில் நான் ஆபத்தான சத்திர சிகிச்சை ஒன்றுக்குள்ளாகவிருக்கிறேன். சிலவேளை இனிமேல் நான் பார்லிமெண்டுக்கே திரும்பி வராமலும் இருக்கலாம். இன்னும் சிறிதுநேரம் கூட அனுமதிப்பீர்கள் என்றே நம்புகிறேன்".

## மொழி ஒரு இனத்தின் உரிமைக் குரல்

### பார்லிமெண்டில் ஜி. ஜி.

கொழும்பு, வெள்ளி

"மொழி ஒரு இனத்தின் உரிமைக்குரல், சிங்களவர்களுக்கு சிங்களம் எவ்விதமோ அதுபோலவே தமிழர்களுக்கு தமிழ் உயிரனையது, மொழிப்பிரச்னையை வைத்தே சென்ற ஒன்பது வருடகாலமாக எதிர்க்கட்சியினர் ஆட்சிநடத்தினர்" என்று யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இன்று சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. பொன்னம்பலம் மேலும் தெரிவித்தாவது:

எனக்கு முன்னர் பேசிய எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி நான் விளங்கக்கூடியதாக ஆங்கிலத்தில் பேசுமாறு கேட்டும் பேசவில்லை. தேர்தல் முடிந்ததும் தமிழரசுக்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே எதிர்க்கட்சியினர் ராஜினமாசெய்யாதிருந்தார்கள். இது சந்தர்ப்பவாதமில்லாமல் வேறென்ன? எனது கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஒப்பந்தம் எதுவுமுண்டாவெனக் கேட்கிருர்கள். இன்று நேற்றல்ல கடந்த 25 வருடங்களாக ஜனநாயகத்தை விரும்புபவர்களையே நான் ஆதரித்து வந்திருக்கிறேன். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடனேயே ஜனநாயகத்தை ஆத



ரிக்கும் கட்சிகளுடன் சேர்ந்து சர்வாதிகார முயற்சிகளை முறியடிப்பேனென வெளிப்படையாகத் தெரிவித்தேன். சென்ற நான்கு தினங்களாக எதிர்க்கட்சியினர் ஏதோ பேசினரென்றாலும் மொழிப்பிரச்னையைத் தீர்ப்பது எவ்விதம் என்பது பற்றி எதுவுங் குறிப்பிடவில்லை. மொழிப்பிரச்னையை

(6-ம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

தேசிய சுவீப்பின் 34 வது சீட்டிழுப்பு நேற்று நடைபெற்றது. பரிசு பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

முதலாம் பரிசு
05 C 0600 ரூபா 18,810
இரண்டாம் பரிசு
04 M 0367 ரூபா 7,524
மூன்றும் பரிசு
03 C 0607 ரூபா 3,981

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உடல் சக்தியை விட ஆத்மசக்தி அளவிடமுடியாதபடி உயர்ந்ததாகும். தங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்கொன்றுக்குப் பரிகாரம் காண மக்கள் ஆத்மசக்தியைப் பயன்படுத்துவதாயின், இன்றுள்ள பல சங்கடங்களையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: "EELA NADU" Jaffna Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை ஸ்ரீ 12 உ. (24 4-65)


## செயல் வேண்டும் பேச்சல்ல!

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது சென்ற ஐந்து தினங்களாக நடைபெற்ற விவாதம் நேற்றுடன் முடிவடைந்து எதிர்பார்த்தபோல் திருத்தப் பிரேரணைகள் தோல்வியடைந்து நன்றிதெரிவிக்கும் பெரும்பான்மைப்பலத்தினுல் நிறைவேறியது.

1948-ம் ஆண்டில் சுதந்திரம் பெற்றதிலிருந்து இதுவரை சிம்மாசனப் பிரசங்கங்கள் பலவற்றை நாடு கேட்டுள்ளது. இந்தப் பிரசங்கங்கள் எல்லாம் பொதுவாக நிறைவேருத வாக்குறுதிகளாகவே இருந்திருக்கின்றன. குறிப்பாக திட்டமிட்ட அபிவிருத்தி, தேசிய வருமான உயர்வு, வாழ்க்கைச் செலவுக் குறைப்பு ஆகியவை பற்றி சிம்மாசனப் பிரசங்கங்கள் நிறைவேருத வாக்குறுதிகளைக் கொண்டதாகவே இருந்துவந்திருக்கின்றன. இலங்கையின் அண்டைநாடான இந்தியாவில் ஸ்திரமான சோஷலிஸ அரசாங்கம் அமைந்துள்ளது. ஐந்துவருடத் திட்டங்கள் மூலம் அந்நாடு தனது நோக்கத்தை நிறைவேற்றிவருகிறது.

இந்தியாவில் தேசிய அபிவிருத்தித்திட்ட நிபுணர்கள் தெளிவாகத் திட்டம் தீட்டுகின்றனர். நாட்டின் சொந்த வருமானத்துடன் அமெரிக்கா மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் பெறும் உதவியுடன் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. நவசீனு அதிகம் சாதித்துள்ளதாக மார்க்ஸீய வாதிகள் சொல்லக்கூடும். ஆனால், இலங்கையில் அடிக்கடி பேசப்படும் சுதந்திரத்தையும், ஜனநாயக வாழ்க்கைமுறையையும், தேசிய கலாசாரம், சமயம் ஆகியவற்றையும் இந்தியா பேணிப் பாதுகாத்துள்ளது. வகுப்புக் கலகம், இன, மத, மொழி வெறிகள் ஆகிய தேசிய விரோத சக்திகளையும் இந்தியா சமாளித்துள்ளது. இதேசமயம் தேசியமயம் நீர்வீழ்ச்சி மின்சார அபிவிருத்தி, கைத்தொழில், கனரகத் தொழில் திட்டங்கள் மற்றும் தேசியவருமானத்தைப் பெருக்கக்கூடிய திட்டங்களையும் இந்திய தேசிய அரசாங்கம் நிறைவேற்றிவருகிறது.

இந்தியாவுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் எட்டு வருடங்கள் ஐக்கிய தேசியக் கட்சியும், எட்டு வருடங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆட்சிபுரிந்துள்ளன. இக்காலத்துக்குள் சில சமயம் ஸ்திரமில்லாத நிலையும் இருந்துள்ளது. இந்த அரசாங்கங்கள் தேசிய வருமானத்தைப் பெருக்க எடுத்த எந்த முயற்சியும் திட்டமும் வெற்றி பெற்றதாகச் சொல்ல இடமில்லை. இன்று ஆட்சிக்குவந்துள்ள தேசிய அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களைப்போலவோ முன்னைய ஆட்சியாளர்களைப் போலவோ இல்லாது சமூகசேவை, கல்வி சுகாதாரம் ஆகியவைகளைச் சீராக்கவும், சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும் மொழிப் பிரச்னைக்குச் சமூகமான தீர்வு காணவும் உறுதியளித்துள்ளது. இவைகள் யாவும் நிறைவேற்றப்பட்டுவிட்டதாக வைத்துக்கொண்டாலும் மக்களுக்கு போதிய, மலிவான உணவும், உடையும் வீடும், வேலைவாய்ப்பும்தான் முக்கிய தேவையாகும், திட்டமிட்ட அபிவிருத்தித்திட்டங்கள் மூலம் தேசிய பொருளாதாரத்தைப் பெருக்குவதில் ஈட்டும் வெற்றியில்தான் அரசாங்கத்தின் வெற்றி தங்கியுள்ளது. இதற்கான திட்டத்தையும் செயலையும்தான் மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். அதுவரை சொல்லம்புகளும் குற்றச்சாட்டுகளும் பதில் குற்றச்சாட்டுகளும் இருக்கத்தான் செய்யும். இப்பொழுது நாட்டுக்குத் தேவை பேச்சல்ல; செயல்தான்!

## "ஒற்றுமையில்தான் முன்னேற்றம்"

உடுப்பிட்டி, வெள்ளி

"ஒரே ஊரிலுள்ள வாலிபர்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும். வாலிபர்களின் ஒற்றுமையிலும் ஒத்துழைப்பிலும்தான் ஊரின் முன்னேற்றம் தங்கியுள்ளது. எந்தவிஷயத்திலும் இளைஞர்கள்பொறுமையுடனும் சிந்தித்தும் செயலாற்றவேண்டும். கட்சிரீதியாக வேறுபட்டிருந்தாலும் ஊரை முன்னேற்றும் பொது விஷயங்களில் அனைவரும் சகோதரர்கள் போல ஒத்துழைக்கவேண்டும்" என்று கெல்லியடி சனசமூகநிலைய வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமைவகித்த திரு வேலாயும் பேசுகையில் கூறினூர்.

உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. என். பாலசுரன் பேசுகையில், பலதிரச் செயல்களையும் சாதனைகளையும் சாதிக்கவேண்டியது வாலிபப் பருவத்தில்தான் என்ளுர்.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். கே. சுப்பிரமணியம், உப-தலைவர்: வித்துவான் பொன். சிவப்பிரகாசம் இணைச்செயலாளர்கள்: ஆசியர்கள் திரு. க. பாலசிங்கம், திரு ச. சுப்பிரமணியம்.

## பிரதமருக்கு வேண்டுகோள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

வடமேல் மாகாணத்திலும் தென்மேல் மாகாணத்திலும் ஆகிய பகுதிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு வட்டமேசை மகாநாட்டைக் கூட்டி இங்கு எழுந்துள்ள தகராறைத் தீர்த்துவைக்குமாறு வியட்நாமிலுள்ள பிரபல பௌத்த ஆலயத்தைச் சேர்ந்த வணநாரதா என்ற பிக்கு இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பார்லிமெண்ட்

# 'முந்திய அரசாங்கத்தின் செயல்களுக்குநாம்பொறுப்பல்ல'

## கல்வி மந்திரி சாட்டை

பம்பலப்பிட்டி, வெள்ளி

'இங்கே பிரஸ்தாபிக்கப்பட்ட பொலிஸ் அட்டூழியங்கள் முன்னுன் அரசாங்கத்தினுலேயே ஆரம்பிக்கப்பட்டவை, ஆகையால் முன்னுன் அரசாங்கம் ஆட்சியில் இருக்கும்பொழுது நடந்த சம்பவங்களுக்கெல்லாம் நாம் பொறுப்பல்ல. அத்துடன் மார்ச் 23, 24-ந் திகதிகளில் சில சம்பவங்கள் நடைபெற்றன. இவைபற்றிய விபரங்கள் யாவும் கூடியவிரைவில் வெளியிடப்படும். இலங்கையில் நடைபெற்ற தேர்தல்களில் 1965-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல்தான் மிகவும் அநீதியான முறையிலும் ஒழுங்கற்றமுறையிலும் நடைபெற்றதெனலாம்.

இவ்வாறு கல்விமந்திரி திரு. இரியகொலை ஜனப்பிரதிநிதிகள்சபையில் நேற்று பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

அரசாங்க உத்தியோகத்தில் இருந்த உயர்தர அதிகாரிகளும் கூட்டரசாங்கத்திற்காக ஆதரவு தேடினர். ஒரு சில அரசாங்க உத்தியோகத்தர்களே ஐக்கியதேசியக்கட்சிக்காக வேலைசெய்தனர். மேலும் இ. போ. ச. முழுமையாக கூட்டரசாங்கத்தினுல் உபயோகிக்கப்பட்டது. கூட்டுறவுமொத்த விற்பனவுஸ்தாபனங்களில் தகுதியற்றவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர், பிரதமர் டட்லிசேனநாயகாவினுடைய தொகுதியில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் சுதந்திரக்கட்சிக்காக உழைப்பதற்காக வேலையில் அமர்த்தப்பட்டார், இவையெல்லாம் வெட்கப்படவேண்டிய விஷயங்கள்.

# நிவாரணம் வழங்குவது பற்றி அரசாங்க அதிபர்கள் ஆராய்வர்

பம்பலப்பிட்டி, வெள்ளி

சூறவளியினுலும் வறட்சியினுலும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணம் அளிப்பது சம்பந்தமாக ஆலோசனை நடத்துவதற்காக சமூகசேவை மந்திரி திரு. அசோகா கருணுரத்ண, பாதிக்கப்பட்ட பகுதிகளின் அரசாங்க அதிபர்களை ஒரு மகாநாட்டிற்கு அழைத்துள்ளார், இம்மாதம் 30-ந் திகதி இந்த மகாநாடு மந்திரியின் காரியாலத்தில் நடைபெறவிருக்கிறது.

அந்த மகாநாட்டில் வீடமைப்புத் திட்டங்கள் பற்றியும், மீனவர்களின் சீரமைப்புப்பற்றியும் வரட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் எவ்வாறு குளங்கள் திருத்தியமைக்கப்படவேண்டும் என்பதுபற்றியும் ஆராயப்படும்.

வரட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் மேலும் நிவாரணம் வழங்கும் நிலையங்கள் திறக்கப்படவேண்டும் என்றும் நீர்ப்பாசன—தெருவேலைகளில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலைகள் கொடுக்கப்படவேண்டும்என்றும் சமூகசேவை மந்திரி உத்தரவிட்டுள்ளார். பெரும் அளவிறகு பாதிக்கப்பட்ட இடங்கள மன்னார் திருக்கோணமலை, அம்பாந்தோட்டை ஆகியவையே, அம்பாந்கோட்டைப் பகுதியில் குடிதண்ணீர் நிலைமை தற்பொழுது சீர் அடைந்துவிட்டதாகவும் மந்திரி கருத்துத் தெரிவித்துள்ளார்.

## கோகிலாம்பாள் தூக்குத்தண்டனை ஒத்திவைப்பு

பம்பலப்பிட்டி, வெள்ளி

சாசிலிங்கசர்மாவை கொலைசெய்த குற்றத்திற்காக தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட கோகிலாம்பாளுக்கும் குத்தர் வேலு பிள்ளைக்கும் தூக்குத்தண்டனை முறையே ஜூன் 11-ந் திகதிக்கும் 12-ந் திகதிக்கும் பின்போடப்பட்டுள்ளது இத்தண்டனை காலவரையற்ற கடவையாக பின்போடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வானெலியில் இலக்கிய நாடகம்

சுன்னுகம், வெள்ளி

இராமாயண காவியத்தின் அடிப்படையில் 'சிற்பி' எழுதிய 'பின்னவான் பெற்ற செல்வம்'' என்ற இலக்கிய நாடகம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7-15 மணி தொடக்கம் 8-00 மணிவரை இலங்கை வானெலி தேசிய ஒலிபரப்பில் ஒலிபரப்பப்படும்.

## கைத்தொழில் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுதல் பரிசுகளின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 03 J 0470 | 08 Q 0949 | 02 J 0130 |
| 09 Y 0615 | 01 U 0653 | 06 U 0274 |
| 09 S 0752 | 05 W 0373 | 06 J 0160 |
| 01 N 0525 | 08 X 0224 | 05 P 0962 |
| 06 A 0659 | 01 Q 0156 | 03 B 0101 |
| 10 K 0509 | 09 V 0506 | 03 I 0495 |
| 04 N 0897 | 10 X 0971 | 02 Z 0115 |
| 03 V 0938 | 09 J 0324 | 05 Z 0405 |
| 03 S 0643 | 10 M 0981 | 09 X 0949 |
| 02 B 0054 | 10 M 0668 | 03 P 0584 |
| 01 A 0458 | 04 S 0303 | 08 R 0682 |
| 01 W 0036 | 04 S 0188 | 02 E 0883 |
| 07 Y 0109 | 05 V 0247 | 07 J 0244 |
| 03 Y 0079 | 07 G 0029 | 10 F 0205 |
| 05 Y 0685 | 06 M 0364 | 05 R 0247 |
| 09 E 0849 | 07 R 0042 | 01 C 0075 |
| 08 Z 0476 | 06 A 0925 | 06 R 0148 |
| 03 U 0497 | 05 L 0166 | 02 S 0010 |
| 07 K 0258 | 01 L 0013 | 09 I 0726 |
| 09 M 0693 | 07 D 0581 | 03 N 0087 |
| 05 N 0514 | 02 Y 0886 | 05 Z 0644 |
| 06 M 0542 | 10 I 0190 | 01 P 0428 |
| 02 N 0054 | 03 L 0337 | 10 D 0460 |
| 02 C 0251 | 10 I 0117 | 07 L 0547 |
| 09 Z 0665 | 01 R 0689 | 06 S 0861 |
| 09 C 0973 | 01 Z 0536 | 08 M 0185 |
| 10 J 0413 | 08 V 0564 | 07 P 0110 |
| 09 J 0709 | 09 P 0223 | 07 L 0041 |
| 06 Z 0076 | 01 X 0421 | 04 I 0085 |
| 02 R 0919 | 06 Z 0563 | 06 K 0399 |
| 02 A 0858 | 03 H 0154 | 01 T 0786 |
| 05 R 0461 | 07 V 0401 | 09 W 0084 |
| 08 A 0480 | 01 D 0004 | 04 I 0649 |

## 'நாட்டைக் காப்பதும் நமது கடமை'

சுழிபுரம், வியாழன்

'பெண்கள் வீட்டைக் காப்பதுடன் மட்டுமல்லாது நாட்டைக்காப்பதற்கும் முன்வரவேண்டும். உலக நாட்டுப் பெண்களுக்கு எமது பெண்கள் அதிகம் சளைத்தவர்களல்லர் என்று அகில இலங்கை தமிழரசு மாதர் முன்னணிச் செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் சில்லாலையில் மாதர் முன்னணி அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் பெண்கள் அரசியல் விஷயங்களில் அதிகம் தொடர்பு கொள்வதன் மூலம் தமது பிள்ளைகளுக்கு நல்ல அறிவை ஊட்டலாமென்றும் பல நன்மையான காரியங்களைச் செய்யலாமென்றும் கூறினர் பிறநாட்டுப் பெண்கள் அரசியல் ராஜதந்திரிகளாகவும் நல்லெண்ணத் தூதுவர்களாகவும் விளங்கும்போது நாமும் அப்படியான சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு முன்வரவேண்டும் என்றும் கூறினர்.

உத்தியோகத்தர் விபரம் வருமாறு:-

தலைவி: திருமதி சுலாக்கினி அரியரட்ணம், உபதலைவி: செல்வி திரேசம்மா மனுவேற் பிள்ளை, காரியதரிசி: செல்வி பொலன் நீக்கிலாடபிள்ளை, உப காரியதரிசி: செல்வி பிலோமிஞ சுவாம்பிள்ளை, தனதிகாரி: திருமதிமரியம்மா ஞானப்பிரகாசம், நிர்வாகிகள்: செல்வி பிரான்சிஸ்கா அருளானந்தம், செல்வி கொலன்லிக்கா சூசைப்பிள்ளை.

## நாடும் நடப்பும்

செனட்சபையில் அரசாங்கக் கட்சிக்கு பெரும்பான்மைப் பலம் குறைவு தான். ஒக்டோபர் மாதம் வரைதான் இந்த நிலை. அதன்பின் மாற்றம் ஏற்பட்டுவிடும்.

இவ்வருடம் ஒக்டோபர் மாதத்துடன் செனட்சபையிலுள்ள பத்து அங்கத்தவர்களின் பதவிக்காலம் முடிவடைகிறது. இவர்களில் தெரிவு செய்யப்பட்ட செனட்டர்கள் ஐவர், நியமனம் செய்யப்பட்டவர்கள் மிகுதி ஐவர்.

காலஞ்சென்ற செனட்டர் திரு. சு. நடேசபிள்ளையின் இடத்துக்குத்தான் ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. திருச்செல்வம் செனட்டராக நியமிக்கப்பட்டார், அதனுல் திரு. திருச்செல்வத்தின் செனட் பதவிக்காலமும் ஒக்டோபருடன் முடிவடைகிறது.

மீண்டும் அவர் நியமிக்கப்படுவார் என்பதில் ஐயமில்லை!

செனட்சபைத் தலைவர் திரு. தோமஸ் அமரசூரியாவின் பதவிக்காலமும் ஒக்டோபருடன் முடிவடைகிறது. செனட்சபை நிறுவப்பட்ட காலத்திலிருந்து அதில் அங்கத்தவராக இருந்துவரும் செனட்டர் எஸ. நடேசனும் மீண்டும் தெரிவு செய்யப்படலாம்.

* * *

கொழும்பில் ரோயல் கல்லூரியில் நடைபெற்ற சமய சமரசக் கூட்டம் கொழும்புடன் நின்றுவிடக்கூடாதென்றும் நாட்டின் இதர பகுதிகளிலும் நடைபெறவேண்டுமென்றும் நாம் சென்ற வாரம் கருத்து வெளியிட்டிருந்தோம், நேற்று முன்தினம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் அந்த நல்ல காரியம் நடைபெற்றது.

கொழும்பில் இக்கூட்டத்தை ஒழுங்கு செய்து மூலகர்த்தாவாக நின்று தொண்டாற்றிய திரு வி. எப்; குணரத்தின இங்கு வந்து பலரைச் சந்தித்து கூட்டத்தை நடாத்தி இங்கு ஏற்கனவே நிலவும் சமய நல்லுறவை மேலும் வலுவுள்ளதாக்கிச் சென்றிருக்கிறார். இதர இடங்களிலும் அவர் இப்பணியைப் பரப்பவிருக்கிருராம். அவரது முயற்சியும் தொண்டும் வெற்றி பெறுமென்பதில் ஐயமில்லை. அவருக்கு ஊக்கமளிக்கவேண்டியது மற்றையோர் கடமை.

* * *

திரு. குணரத்தின யாழ்ப்பாணத்துக்குப் புதியவரல்லர். மல்லாகத்தில் நீதவானுகவும் கடமையாற்றியிருக்கிருர். சிறந்த புத்ததாசர். ரமணபக்தரும் கூட!

'பிராணிகள்மீது அன்பு செலுத்துக' என்பது அவர் விடுத்துள்ள வேண்டுகோள். பிராணிகளிடம் அன்பு செலுத்தவேண்டுமென்பது அவரது இயக்கம் இவ்விஷயத்தில் அவர் செய்யும் சேவை கொஞ்சமன்று. வீதியில் வருந்தமுற்றுக் கிடந்த ஒரு நாயை (உயர்சாதி நாயுமல்ல) மிருகவைத்தியரிடம் கொண்டு சென்று அலைந்து 40 ரூபாய்க்கு மேல் ஊசி மருந்துகளும் செலவு செய்து குணபபடுத்தியிருக்கிருர். வீதியில் நாய்கள் திரிவதையே தொல்லையாகக் கருதும் நாம் வியாதியுடன் நாய் வீதியில் கிடந்தால் 'முனிசிபல்' சபையைத்தான் திட்டுவோம்!

பல நல்ல சேவை செய்யும் திரு. குணரத்தின அமைதியானவர் அடக்கமானவர் அவர் பல்லாண்டு வாழவேண்டும்.

—ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பல்கேரியாவில் 50 உயர் அதிகாரிகள் கைதாயினர்

## கம்யூனிஸ்ட் மத்திய கமிட்டி அங்கத்தினர் தற்கொலை

சோபியா, ஏப்ரல் 23

பல்கேரியாவில் பெருமளவு உயர் அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருப்பது உண்மைதான் என்றும், ஆனால் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி எதுவும் நடைபெறவில்லையென்றும் பல்கேரிய அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள்.

பல்கேரியாவில் சதி நடைபெற்றதாய் கடந்த ஒருவார காலமாகவே வதந்திகள் அடிபட்டு வந்தன. ஆனால் இதுவரை அரசாங்கம் மௌனம் சாதித்தபின் இப்போது இத்தகவலை வெளியிட்டது.

சோபியா ராணுவ கமாண்டர் வெளிநாட்டமைச்சின் ஒரு உயர் அதிகாரி உட்பட 50 பேர் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என அறிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் பல்கேரிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகமிட்டி அங்கத்தினர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாக அறிவிக்கப்படுகிறது. பொலிசார் அவரை அணுகுமுன் அவர் தற்கொலைசெய்துகொண்டுவிட்டாராம்.

# வியட்னாம் பிரச்னையை தீர்க்க கொரில்லாக்களுடன்பேசமுடியாது

## அமெரிக்க மந்திரி விளக்கம்

வாஷிங்டன், ஏப். 23

வியட்னாமுக்கு துருப்புக்களை அனுப்புவோம் என்ற சீன மிரட்டல் எப்படியிருந்தபோதிலும் அமெரிக்கா தென்வியட்னாம் விஷயத்தில் கொண்டிருக்கும் பொறுப்புக்களை நிறைவேற்றும் என வெளிநாட்டுமந்திரி ரஸ்க் கூறினார்.

"சீனாவின் இத்தகைய பயமுறுத்தல்களைப் பலமுறை கேட்டாகிவிட்டது. அதனால் வியட்னாம் நிலைமைக்கு அமைதித் தீர்வு ஏற்படாது. சீன படைகளை அனுப்பக்கூடும். எனினும் வியட்னாம் விஷயத்தில் எங்கள் நிலையில் மாற்றம் இல்லை" என்றார் ரஸ்க்.

"வியட்னாம் பிரச்னையின் இருதய ஸ்தானம் துருப்புக்களையும் ஆயுதங்களையும் வடவியட்னாம் தென்வியட்னாமுக்குள் கள்ளத்தனமாக அனுப்பி வருவதே ஆகும். இந்த ஊடுருவலையும் ஆக்கிரமிப்பையும் நிறுத்த வடவியட்னாம் விரும்புவதாகத் தெரியவில்லை" என்றும் ரஸ்க் குறிப்பிட்டார்.

"சமாதானப் பேச்சுக்கு கதவுகள் முற்றாக அடைக்கப்பட்டுவிட்டன என நான் கூறவில்லை. வடவியட்னாம் கூறியதாகக்கூறும் அம்ச யோசனையுடன் மேலும் ஏதாவது சேர்க்கப்படுமா என்பது எதிர்காலத்தைப் பொறுத்த விஷயம்" என்றும் அவர் மேலும் கூறினார், வடவியட்னாம் பிரதமர் திரு பான்வான்டாங் கீழ்கண்ட 4 அம்சங்களை வியட்னாம் தீர்வுக்கு அடிப்படை அமைத்திருக்கிறார்.

(1) வடக்கு, தெற்கு வியட்னாமின் இறுதியான இணைப்பு.

(2) வியட்னாமிலிருந்து அமெரிக்கப்படைகள் வாபஸ்பெறுதல். வடவியட்னாம் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை நிறுத்தல்.

(3) வியட்காங் கம்யூனிஸ்டுகளின் அரசியல் பகுதியான தேசிய விடுதலை முன்னணியின் திட்டப்படி தென்வியட்னாமுக்கு ஓர் அரசியல் தீர்வு காணுதல்.

(4) வடக்கு, தெற்கு வியட்னாம் இரண்டும் எந்த வெளிநாட்டு முகாம்களுடனும் ராணுவக்கூட்டு சேராதிருத்தல்.

திரு. ரஸ்க் மேலும் பேசுகையில் கடந்த 7-ந் திகதி ஜனாதிபதி ஜோன்ஸன் வெளியிட்ட நிபந்தனையற்ற சமரசப் பேச்சுக்கும் தென்கிழக்காசியாவின் அபிவிருத்திக்கு 100 கோடி டாலர் பொருளாதார உதவித்திட்டத்துக்கும் உலகெங்கும் பேராதரவு இருப்பதாய்க் கூறினார்.

வியட்னாம் மோதலைத்தடுக்க வட்வியட்னாம் தெரிவித்த யோசனையையும் பீகிங், மாஸ்கோ அறிக்கைகளை ஆராய்வதும் கம்யூனிஸ்ட் போக்கைக் கணிப்பதற்கு ஒரு சாதனமாகும்.

தேசியவிடுதலை முன்னணி என்று கூறப்படும் வியட்காங்குகளின் அபிலாஷைக்கேற்ப ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் என வடவியட்னாம் கூறுவது ஏற்கத்தக்கதல்ல. வடக்கு வியட்னாம் திணிக்கும் ஒரு திட்டப்படி தீர்க்கப்படும் பிரச்னை இதுவல்ல என்றும் ரஸ்க் குறிப்பிட்டார்.

---

## ரொடீஷிய தேர்தலை ரத்துசெய்க

நியோர்க், ஏப். 23

தென்ரொடீஷியாவில் தேர்தல் நடத்துவதை ரத்துச் செய்யுமாறு காலனி சம்பந்தமான ஐ. நா விசேஷக் கமிட்டி பிரிட்டனைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கு ஆதரவாக 18 வாக்குகள் கிடைத்தன. எதிராக எவரும் வாக்களிக்கவில்லை;

வருகிற புதன்கிழமை பாதுகாப்பு சபை தென்ரொடீஷியா பற்றி விவாதிக்கவிருக்கிறது.

தனது நாட்டின் உள்விவகாரங்களில் ஐ. நா. தலையிடுவதை தென்ரொடீஷியா எதிர்க்கும் என பிரதமர் ஸ்மித் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது.

---

## ஆஸி, நியூஸிலந்து மீது நடவடிக்கை

ஜாகர்த்தா, ஏப். 23

பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஸிலந்து ஆகிய நாடுகள் மலேஷியாவுக்கு உதவியளிப்பதாய், இந்தோனேஷியாவிலுள்ள இந்த நாடுகளின் சொத்துக்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென சிபார்சுசெய்யப்பட்டிருக்கிறது.

---

## மற்றோர் கான்ஸ்டபிள் மரணம்

புதுடில்லி, ஏப். 23

கட்சிலுள்ள ரான் பகுதி முன்னணி நிலையத்தைக்காக்க பாகிஸ்தானுடன் போரிட்டுக் காயமடைந்த குஜராத் ரிசர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்று மரணமானார். இந்தச் சண்டையின் விளைவாக இதுவரை 6 இந்தியப் பொலிஸார் மாண்டிருக்கின்றனர்.

---

## ஷேக் மீது சாதிக் கண்டனம்

புதுடில்லி, ஏப். 23

இந்தியாவைப் போல பாகிஸ்தானும் நட்புறவு உணர்ச்சி கொண்டிருந்தால் தான் இரு நாடுகளும் சமாதானமாக வாழமுடியும் என்றும், ஆனால் பாகிஸ்தான் எப்போதும் சண்டைக்கு முயற்சித்துவருவதால் நமது எல்லைகளைக் காக்க நாமும் அதை எதிர்க்கவேண்டும் என்றும் காஷ்மீர் பிரதமர் திரு. ஸாதிக் கூறினார்.

ஷேக் அப்துல்லா வெளிநாடுகளில் தனது நடவடிக்கை மூலம் சுயரூபத்தைக்காட்டிவிட்டார் என்றும், உள்நாட்டில் ஒரு விஷயத்தைப் பேசலாம் என்றும், அதே விஷயத்தை விரோதிகளிடம் பேசுவது வேறு நிலைமையை அது உண்டாக்கும் என்றும் திரு. சாதிக் கூறினார்.

சீனப் பிரதமர் சூ-என்-லாயுடன் ஷேக் அப்துல்லா பேசியது பற்றி திரு. ஸாதிக் குறிப்பிட்டார்.

---

## சாஸ்திரி நேபாளம் சென்றார்

புதுடில்லி, ஏப். 23

இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி 3 நாள் நேபாளம் விஜயத்தை மேற்கொள்ளும் பொருட்டு இன்று காட்மாண்டு புறப்பட்டார். நேற்று நேபாள-இந்திய நட்புறவுச் சங்கம் அளித்த வரவேற்பில் அவர் பேசியபோது பெல்கிரேடு அணிசாராதோர் மகாநாட்டில் இருநாடுகளும் கொண்டிருந்த கருத்தொற்றுமை, வருகிற ஜூன் மாதம் அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் 2-வது ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டிலும் காணப்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

---

## காஷ்மீரில் அச்சம் நிலவுகிறதாம்

கராச்சி, ஏப். 23

காஷ்மீரில் தீவிர இந்துக்கள் முஸ்லிம்களைப் பயமுறுத்தும் சுவரொட்டிகளை ஒட்டியிருப்பதாயும், ஹிந்து தீவிரவாதியான கோல்வாக்கர் அங்கு விஜயம்செய்து, மன்னர் மகேந்திரரைச் சந்தித்ததாயும், இதன்பின் அங்கு அச்சமும் நெருக்கடியும் நிலவுவதாயும் பாகிஸ்தான் ரேடியோ அறிவித்தது.

முஸ்லிம்கள் அங்கு அச்சத்துடன் வாழ்வதாயும், ராஷ்டிரீய சுயம்சேவக சங்க அங்கத்தினர்கள் பயமுறுத்தல்செய்து வருகிறார்கள் என்றும் 2,37,000 முஸ்லிம்கள் கொடுமைப்படுத்தப்பட்டு பாகிஸ்தான் பகுதிக்குள் விரட்டப்பட்டதாயும் அது, மேலும் அறிவித்தது.

---

## டிக்ஸன் மரணம்

லண்டன், ஏப். 23

ஐ. நா. வில் முன்பு பிரிட்டிஷ் பிரதிநிதியாக இருந்த திரு. பியர்ஸன் டிக்ஸன் தனது 60-வது வயதில் காலமானார். செக்கோஸ்லோவேகியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இவர் பிரிட்டிஷ் தூதராய் இருந்தபோது பல முக்கிய பேரங்களை நடத்திவிருக்கிறார் 2 மாதங்களுக்கு முன்புதான் சேவையிலிருந்து அவர் ஓய்வு பெற்றார்.

---

## காங்கோவுக்கு உதவி குறையும்

நியூயோர்க், ஏப். 23

ஐ. நா. நிபுணர்களின் உயிருக்கு அடிக்கடி ஆபத்து ஏற்படுவதால் காங்கோவுக்கு ஐ. நா. உதவியை குறைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

---

# அமெரிக்கர் - வியட்காங்கியர் நேரடி மோதல்

சைகோன், ஏப். 23

நேற்று அமெரிக்க மானுமி துருப்புக்களுக்கும் வியட்காங்கியருக்குமிடையே முதல்முறையாகக் கைகலப்பு ஏற்பட்டது. இதன் விளைவாக ஒரு அமெரிக்க வீரர் காயமடைந்தார், பினுங்குக்கு மேற்கே இச்சம்பவம் நடைபெற்றது. காயமடைந்தவர் ஹெலிகாப்டர் மூலம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். வியட்காங் சேதம் எவ்வளவு என்பது தெரியவில்லை.

அதேசமயம் அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலிலிருந்து புறப்பட்ட விமானங்கள் வடவியட்னாமில் தாக்குதல் நடத்தின. இதன் விளைவாக பல இராணுவ லொறிகள் நாசமாயின. ஒரு இராணுவத்தளம நாசமாக்கப்பட்டன. பாலம் ஒன்று அழிந்தது.

அமெரிக்க ஜெட் விமானங்களும், தென் வியட்னாம் விமானங்களும் வலுவாக அரண் அமைக்கப்பட்டுள்ள வியட்காங் இலக்கொன்றைத் தாக்கின. தென் வியட்னாமின் 6 படைப் பிரிவுகள் அங்கிருந்து வியட்காங்கியரை விரட்டியடிக்க முயன்றும் அது வெற்றி பெறவில்லையென அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் மேலும் பல அமெரிக்க தரைப்படை வீரர்கள் தென் வியட்னாம் வந்து சேருவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

வட வியட்னாமில் தாக்குதலை நிறுத்துமாறு முன்னாள் அமெரிக்க சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நார்மன் தோமஸ் ஜனாதிபதி ஜோன்ஸனுக்கு விண்ணப்பித்திருக்கிறார்.

---

## அமெரிக்க தளம் பிலிப்பைன்சுக்குதேவை

மணிலா, ஏப், 23

பிலிப்பைன்ஸில் அமெரிக்க தளம் இருப்பது அவசியம் என்றும், அது வாபஸானால் பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் வலைக்குள் விழுந்துவிடும் என்றும் பிலிப்பைன்ஸ அதிபர் மகபகால் கூறினார்.

"ஐ. நா. விலும், வெளியிலும் அமெரிக்கத்தளங்கள் உலகின் பலபகுதியிலுமிருந்து வாபஸ்பெறவேண்டுமென கம்யூனிஸ்டுகள் வற்புறுத்தி வருகிறார்கள். சில எதிர்க்கட்சித் தலைவர்களும் இப்படி வற்புறுத்திவருவது துரதிருஷ்டமானது. ஆனால் இது பிலிப்பைன்ஸ மக்களினதும், அரசாங்கத்தினதும் கருத்து அல்ல" என்றும் மக்பகால கூறினார்.

"தென்வியட்னாமில் நடைபெறும் விஷயங்கள் இதற்கு அத்தாட்சி அங்கு கம்யூனிஸ்டுகள் ஊடுருவலைத் தடுக்க போதுமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதைத்தான் அமெரிக்கா செய்துவருகிறது" என்றும் அவர் கூறினார்.

---

## ஆசிய அபிவிருத்தி வங்கிபற்றி ஜோன்ஸன்

வாஷிங்டன், ஏப்ரல் 23

அமெரிக்க மருந்துகள், உணவுப்பொருட்கள், இதர சப்ளை ஆகியன தென்கிழக்காசிய மக்களுக்கு நேரடியாகக் கிடைக்கத் திட்டங்கள் துரிதமாக நிறைவேற்றப்பட்டிருப்பதாக ஜனாதிபதி ஜோன்ஸன் அறிவித்தார்.

இவ்விஷயத்தில் உடனடி நடவடிக்கை எடுத்துக்கொள்வது சம்பந்தமாய் திரு. யூஜின்பிளாக்குடன் தாம் விவாதிப்பதாய் திரு. ஜோன்ஸன் கூறினார். ஆசிய அபிவிருத்தி ஒன்றை நிறுவுவது சம்பந்தமாயும் தாம் விவாதித்தாய் ஜோன்ஸன் கூறினார்.

---

## தியாகராஜர் இல்லம்

புதுடில்லி ஏப். 23

திருவாரூரில் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் பிறந்த இல்லத்தை அரசாங்கம் தேசிய முக்கியத்துவ ஸ்தலமாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறது.

---

## கு கிளக்ஸ் கிளான்

அலபாமா, ஏப். 23

அலபமாவில் சிவில்உரிமை ஊர்வலத்தில் கலந்துகொண்ட வெள்ளை மாது ஒருவரைக் கொலைசெய்ததாக கு கிளக்ஸ் கிளான் ஸ்தாபனத்தைச் சேர்ந்த மூவர் மீது வழக்கு விசாரணை நடைபெறவிருக்கிறது.

---

## ஜோன்ஸனின் மற்றோர் மகாநாடு

வாஷிங்டன், ஏப். 23

வியட்னாமில் ராணுவப் படைகளை பலப்படுத்துவது பற்றியும், நடவடிக்கையை தீவிரப் படுத்துவது பற்றியும், நடவடிக்கையை தீவிரப்படுத்துவது பற்றியும் ஆராய மற்றோர் உயர்தரமகாநாட்டை ஜனாதிபதி ஜோன்ஸன் நடத்தினார்.

இதற்கிடையில் 3000 கடற்படை அதிகாரிகள் வியட்னாமில் சண்டையிட விரும்பித் தமது பெயர்களைப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள.

---

## சுகர்னோவுக்கு பாகிஸ்தான் அழைப்பு

ஜாகர்த்தா, ஏப். 23

வருகிற ஜூன் மாதம் அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டிற்கு இந்தோனேஷிய அதிபர் சுகர்னோ செல்லும்போது, வழியில் பாகிஸ்தானுக்கு விஜயம்செய்யுமாறு அழைக்கப்பட்டிருக்கிறார் என வெளிநாட்டுமந்திரி பூட்டோ இங்கு கூறினார், நேற்றிரவு அவர் கராச்சி திரும்பினார்.

---

## 82 போர்த்துக்கீச வீரர் பலி

லிஸ்பன், ஏப். 23

அங்கோலாவில் தேசியவாதிகள் 82 போர்த்துக்கேய ராணுவத்தினரைக் கொன்றதாயும், 2 வாகனங்கள் அதில் உயிருடனிருந்தவர்களுடன் எரிக்கப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

---

## மைசூரில் வெளிநடப்பு

மைசூர், ஏப். 22

மைசூர் சட்டசபையின் அடுத்த கூட்டம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. நிலவரியை அரசாங்கம் உயர்த்தியது காரணமாக எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் நேற்று சட்டசபையிலிருந்துவெளிநடப்புச் செய்தார்கள்.

---

## 'போலி டாக்டர்' கைது

### நிஜடாக்டரிடமிருந்து பணம் பெற்றாராம்

எர்ணாகுளம், ஏப்ரல் 23

சரளமாக ஆங்கிலம் பேசியும் டீக்காக உடையணிந்தும் ஒரு டாக்டர்போல நடித்துவந்த ஒருவரை எர்ணாகுளம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்த ஆசாமி ஏற்கனவே பல்வேறு ராஜ்யங்களில் 7 தட்வை தண்டனை பெற்றிருக்கிறார் என்பது தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விவசாயி தனது பலனை தானே அனுபவிக்கவேண்டும்'

## கூட்டுறவு ஆணையாளர் கருத்து

நல்லூர் சனி

அகில இலங்கை காய்கறி உற்பத்தியாளரின் கூட்டுறவுச் சமாசக் கிளையை நல்லூரகத்தில் கூட்டுறவு ஆணையாளர் திரு. ஏச். எஸ். வனசிங்கா அங்குரார்ப்பணஞ் செய்துவைத்தார். அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ஆணையாளர் திரு வனசிங்கா பேசியதாவது:

இலங்கை பூராவும் வாழும் விவசாயிகள் தரகர்களின் கையில் சிக்கி தமக்குச் சேரவேண்டிய பணத்தை வீணாக இழப்பதனை இத்தகைய ஸ்தாபனம் தடை செய்கிறது. ஒவ்வொரு விவசாயியும் தமது பலனைத் தாமே அனுபவிக்க வேண்டும். உற்பத்தியாளரிடம் குறைந்த விலைக்கு பொருட்களை வாங்கி கூடுதலான விலையில் பிற இடங்களில் விற்பனை செய்யும் தரகர்களிடமிருந்து இக்தஸ்தாபனம் அவர்களைப் பாதுகாக்கும். தென்னிலங்கையில் உற்பத்தியாகும் பொருட்களை வட இலங்கையில் விற்பனை செய்வதோடு வட இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை தென்னிலங்கையில் விற்பனை செய்யவும் இந்த ஸ்தாபனம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

இந்த நாட்டில் வாழும் மக்களுக்கு இன மத பேதமின்றிச் சேவை செய்ய உருவாக்கப்பட்ட இந்த ஸ்தாபனத்தை ஆதரிப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

வலி [வடக்கு காரியாதிகாரி திரு டி. முருகேசபிள்ளை பேசியதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலி-வடக்குப் பிரிவில்தான் காய்கறி உற்பத்தி அதிகமாகக் காணப்படுகிறது. இப்பகுதியில் இப்படியான ஸ்தாபனம் நிறுவப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இதுவரைகாலமும் விற்பனை இலாகா மூலமே பொருட்கள் இங்கிருந்து தென்னிலங்கைக்கும் தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் பொருட்கள் கொண்டு செல்லப் பட்டன. இவ்வகையில் கூட்டுறவு சமாசக் கிளை ஒவ்வொரு விவசாயிக்கும் உதவுவதாக இருக்க வேண்டும்.

முதலியார் வை. மகேசன் உட்பட மற்றும் பலர் பேசினர்.

## "தேசிய அரசாங்கத்தின் உறுதி"

கலிகமுவா, வெள்ளி

"தேசிய அரசாங்கம் எல்லோரையும் சரிசமமாக நடத்துவதென உறுதி பூண்டுள்ளது. அரசாங்கம் எவர்மீதும் பாரபட்சம் காட்டமாட்டாது. அரசியல் எதிரிகளிடம் கூட தேசிய அரசாங்கம் பாரபட்சம் காட்டாது."

இவ்வாறு சுகாதார உதவி மந்திரி திருமதி விமலா கன்னங்கரா கலிகமுவாவில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:-

நாட்டில் அமைதியைக் குலைத்துவிடும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் பொறுப்பற்ற பேச்சுக்கள் பேசிவருகிறார்கள். இவர்களின் பேச்சை நம்பி மக்கள் தவறான வழியில் சென்றுவிடக் கூடாது என நான் கேட்டுக் கொள்கின்றேன்.

## "பொறுப்பற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்"

களுத்துறை, வெள்ளி

உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் பெரேரா இன்று கோர்ட்டிற்கு வந்த ஜூரர்களுக்கும் எதிர்தரப்பு வழக்கறிஞர்களுக்கும் பெரிதும் இடையூறு கொடுத்திருக்கின்றார். இந்த வழக்கிற்கு முக்கிய சாட்சியான பொலிஸ் சார்ஜண்ட் எவ்வளவு காலம் ஆஸ்பத்திரியில் இருப்பார் என்ற விபரத்தை அவரினால் கொடுக்க முடியவில்லை. இது இன்ஸ்பெக்டரின் திறமையை ஓரளவிற்கு எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் தகுதிவாய்ந்த ஒரு உத்தியோகத்தை அவர் பொறுப்பேற்பதற்கு உகந்தவரல்லர் என்பது தெரிகின்றது என்று நீதியரசர் திரு. ஓ. எல். டி. கிறஸ்டர் களுத்துறை கோட்டில் பொம்புல்ல பொலிஸைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பெரேராவைப் பார்த்து மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த வழக்கில் பிரேமசிறி என்ற ஒருவர் 18 வயதுடைய பியசீலி என்ற பெண் மீது பலாத்காரம் உபயோகித்ததாகக் குற்றம்சாட்டி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

## 'வேற்றுமைகளை மறந்துவிடுங்கள்'

### உதவிமந்திரி வேண்டுகோள்

வெலிசறை, வெள்ளி

'மக்கள் வேற்றுமைகளை மறந்துவிட்டு இதயபூர்வமாக அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்கவேண்டும்' என கைத்தொழில் மீன் பிடி உதவி மந்திரி திரு. ஷெல்டன் ஜெயசிங்கா வெலிசறையில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு ஒன்றுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

சுதந்திரக்கட்சியின் திறமையின்மையான ஆட்சி காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை இப்போதைய அரசாங்கம் சமாளிக்கவேண்டிய நிலை இருக்கிறது என்றும் டாக்டர் என். எம். பெரேராவினாலும் அவரது சகபாடிகளாலும் மறுக்கப்பட்ட தொழிலாளர்களின் 21 அம்சக் கோரிக்கைகளில் 90 சத விகிதமான கோரிக்கைகளை தேசிய அரசாங்கம் நிறைவேற்ற முயற்சி மேற்கொள்ளுமென்றும் உதவி மந்திரி தெரிவித்தார்.

## உற்பத்தியாளர் சங்க கோரிக்கை

பம்பலப்பிட்டி, வெள்ளி

திருக்கோணமலைத் துறைமுகத்தையும் காலித் துறைமுகத்தையும் தேயிலை ஏற்றுமதி செய்வதற்காக மீண்டும் வசதி செய்யுமுகமாக ஒரு றாத்தல் தேயிலைக்கான வரியில் இரண்டு சதம் கழிவு வழங்கும்படி தெற்கு மாகாண உற்பத்தியாளர் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதெனத் தீர்மானித்துள்ளது.

இந்தவிதமான கழிவு முன்னர் வழங்கப்பட்டதாகவும் சிறிது காலத்தின்பின் அது வாபஸ் பெறப்பட்டதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

## சதி கைதிகள் சிறைமாற்றம்

பம்பலப்பிட்டி, வெள்ளி

வெலிக்கடை சிறையில் இருந்த சதிவழக்கின் குற்றவாளிகளாகக் காணப்பட்ட 11 கைதிகளும் மகஸின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

இந்த கைதிகள் வெலிக்கடை சிறையில் இருந்தபோது [illegible] [illegible] அவ்வாறே [illegible] [illegible] கவென அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## மந்திரி ஆராய்கிறார்

பம்பலப்பிட்டி, வெள்ளி

பின்தங்கிய உள்ளூர் ஆட்சி மன்றங்களின் நிதிநிலைமை பற்றி விசேஷ கவனத்துடன் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது.

மந்திரி அனேகமாக உள்ளூராட்சி மன்றங்கள் உள்ள இடங்களுக்கெல்லாம் விஜயம் செய்து வேண்டிய விபரங்களை சேகரிக்கத்திட்டமிட்டுள்ளார். தனது காரியாலயத்தில் வேலைசெய்யும் உத்தியோகத்தர்களை தெரிந்துகொள்வதுடன் நில்லாது மந்திரி நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி மன்ற மேயர்கள், தலைவர்கள் அங்கத்தவர்கள் முதலியோருடன் தான் தொடர்புகொண்டு கருத்துப் பரிமாற விரும்புவதாகவும் கருத்துதெரிவித்துள்ளார்.

## தபால் திருட்டுக்கள் பற்றி விசாரணை

பம்பலப்பிட்டி, வெள்ளி

கடந்த சில வருடங்களில் தபாலில் தொலைந்த சுமார் 4,500,000 ரூபா பெறுமதியான பொருள்கள் சம்பந்தமாக இரகசிய பொலிஸார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

இந்த திருட்டுக்களில் அதிகமானவை சில கோஷ்டியினரால் திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்டவை என்றும் கொழும்பு லோட்டஸ் வீதியிலுள்ள தபால் தரம்பிரிக்கும் காரியாலயத்தில் கடமையாற்றும் சில ஊழியர்களும் இந்த திருட்டுக் கோஷ்டியினருக்கு உதவியதாக தபால் இலாகாவைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தபாலில் தொலைந்துபோன பொருட்களில் காணி உறுதிகளும் உண்டு என்று தபால் இலாகா அதிகாரி கூறியுள்ளார்.

## டாக்சி களவாடப்பட்டது

பம்பலப்பிட்டி, வெள்ளி

கொழும்பு புறக்கோட்டையில் சென்ற புதன்கிழமை டாக்சி சாரதி ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு பின்னர் அவரது டாக்சி களவாடப்பட்ட சம்பவம் பற்றி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்த டாக்சி பின்னர் பொரளையில் காணப்பட்டது. இந்த டாக்சி பொரளையில் விபத்தொன்றில் சிக்கியிருந்தது. பொலிஸார் இதுபற்றி தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

## நெசவாலை நிறுவத்திட்டம்

பருத்தித்துறை, வெள்ளி


புலோலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்க சமாஜம் ஒன்றே முக்கால் லட்ச ரூபா முதலீடு செய்து மின்சைத்தறிகளை உடைய நெசவு ஆலை ஒன்றை விரைவில் நிறுவவிருக்கிறது.

கூட்டுறவு இலாகாவினால் நாற்பத்தெட்டு விசைத்தறிகள் இச்சமாஜத்துக்குக் கிடைக்கவிருப்பதாயும் நெசவாலைக்கான கட்டடம் ஒன்று கட்டிமுடிக்கப்பட்டதும் தறிகள் இணைக்கப்படும் எனவும் தொடர்புடைய அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

## திரைப்படத்துக்கு வெண்கல பதக்கம்

ரோமாபுரி, ஏப்ரல் 28

இத்தாலியில் நடைபெற்ற சர்வதேச விளையாட்டுப் போட்டி சம்பந்தமான திரைப் படக்காட்சியில் "எங்கள் தேசிய விளையாட்டு ஹாக்கி" என்ற இந்தியப் படத்திற்கு வெண்கலப் பரிசு கிடைத்திருக்கிறது.

குதூகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே!

இதை அளிக்கிறது

**நேத்திராலோகதைலம்**

இது பீனிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

½ போத்தல் ரூ. 3/- தபால் செலவு சதம் /-85.

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.



★

டப்ளியூ. கே. ஜினதாஸ,

ஆயுர்வேத வைத்தியர்,


161, நோரிஸ் ரோட்,

கொழும்பு-11.

தங்கமுலாம் பூசப்பட்ட கவர்ச்சிகரமான

**சவரின் வளையல்கள்**

ஐந்துவருடம் உத்தரவாதம் பெற்றவை



M 43. M 39. M 41. M 36. M 3. M 35. M 37. M 36. M 45. M 46.

M 32. M 30. M 47. M 27 M 49. M 42 M 31. M 29.

உண்மையான தங்கநகைகளுக்கு நிகரானது. அழகிலும் உருவ அமைப்பிலும் சவரின் தங்கநகைகளுக்கு ஒப்பானது. சகல வைபவங்களுக்கும் உபயோகிக்கக்கூடிய வகையில் நவீன உருவ அமைப்புக் கொண்டவை. தங்கமுலாம் பூசப்பட்ட சவரின் வளையல்கள் பற்றிய எங்களின் நிபந்தனைகள்:- உத்தரவாதமளிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள், நிறம் மற்றும் சகல வளையல்களும் கட்டணம் எதுவுமின்றி மீண்டும் தங்கம் பூசிக்கொடுக்கப்படும். எங்களால் பொறுப்பேற்கப்படும் ஆடர்கள் வி. பி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

M 43, M 39, M 41, M 36, M 3, M 35
M 37, M 36, M 40, M 46, —
எந்த ஜோடி உருவ, அமைப்புக்கொண்ட
ஒரு ஜோடியின் விலை ரூபா 5-00

M 42 ஜோடி ரூ 6-00, M 30 ஜோடி ரூ. 7-00 M31 ஜோடி ரூ 8-50. M 27 ஜோடி ரூ 12-50, M 32 ஜோடி ரூ. 12-50, M 49 ஜோடி ரூ 15-00. M 29 ஜோடி ரூ. 15-0 M 47 ஜோடி ரூ 18-50.

**ஈ. பிரான்சிஸ் பெரேரா அன்ட் கம்பனி**

12, யட்டிநுவர வீதி, கண்டி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வானொலி நிகழ்ச்சிகள்

### சனி 24-4-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இலங்கையகீதங்கள்.

பகல் 12-00 திரைகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைப்பட இசை.

இரவு 6-15 கிராமிய நிகழ்ச்சி, 6-45 சென்றவார நிகழ்ச்சி, 7-09 இசைச்சங்கீதம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 சங்கீதநிகழ்ச்சி, 10-00 நேயர்விருப்பம்.

### ஞாயிறு 25-4-65

காலை 6-45 உதயகீதம், 6-50 கீதைவாசகம், 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 7-45 இசைவகுப்பு, 8-00 பௌத்த பிரசங்கம், 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 கீதாஞ்சலி, 9-00 முஸ்லிம் பாடசாலை, 9-30 கத்தோலிக்கநிகழ்ச்சி, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மத்தாப்பு.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு — ஜெகதாம்பிகை சிவஞானசுந்தரம், 5-45 திரைப்படஇசை.

இரவு 6-15 ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் அஞ்சல் 7-15 நாடக அரங்கு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மனைவிளக்கு — மாதர் நிகழ்ச்சி, 10-15 தேர்ந்த இசை.

## மகேந்திரன் கானா உதவி ஹைகமிஷனர்

பம்பலப்பிட்டி, வெள்ளி கானாவில் இலங்கையின் உதவி ஹைகமிஷனராக திரு. சி. மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். கானாவில் இலங்கையின் கமிஷனராகக் கடமையாற்றிவந்த திருமதி லோறய்ன் சேனரத்ன திருப்பி அழைக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்பதவி காலியாகவுள்ளது.

## ஸ்தலஸ்தாபன கமிஷனரின் அறிவிப்பு

பம்பலப்பிட்டி, வெள்ளி உள்ளூராட்சி மன்றங்கள் தமது எல்லைகளுக்குள் வரிகளை அறவிட்டு வரிப்புத்தகங்களையெல்லாம் சரியாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் இது அவர்களது பொறுப்பு எனவும் ஸ்தலஸ்தாபனக் கமிஷனர் திரு. டபிள்யு. டி. வி. மகாதந்தில சகல உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இந்த வரிகளை சரியாக அறவிடவில்லையென ஆடிட்டர் ஜெனரல் ஸ்தலஸ்தாபன கமிஷனருக்கு சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்தே இவ்விதம் ஸ்தலஸ்தாபன கமிஷனர் அறிவித்தல் கொடுத்துள்ளார்.

## வித்யாலங்காரபரீட்சை ரத்து

பம்பலப்பிட்டி, வெள்ளி வித்யாலங்கார பல்கலைக்கழக புகுமுக பரீட்சையை ரத்துச் செய்வதென வித்தியாலங்கார பல்கலைக்கழக சவுன்சில் முடிவு செய்துள்ளது. இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் வெளியாகிவிட்டதாக தெரிவிக்கப்பட்ட புகாரைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காஷியர் தேவை: இருபாலாரும் மகரில விண்ணப்பிக்கவும். பிணைப்பணம் ரூபா 500/- மாதச்சம்பளம் ரூபா 75/- கலாசோதி இன்டஸ்றீஸ், 160, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (பஸ் நிலையத்திற்கு முன்)

## வட இலங்கைச் சங்கீத சபை யாழ்ப்பாணம்

### சங்கீதப் பரீட்சைகள் 1965

இவ்வாண்டுப் பரீட்சைகள் யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் 1965-ம் ஆண்டு ஆடி மாதம் 24-ந் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

விண்ணப்பங்கள் 1-6-65 வரை ஏற்றுக்கொள்ளப்படும். பிந்திய விண்ணப்பங்கள் 20-6-65 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப் பத்திரங்கள், மற்றும் விபரங்கள் ஆதியவற்றிற்கு தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை, கல்விக்கந்தோர், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சென்ற ஆண்டுப் பாடத்திட்டத்திற்கமையவே பரீட்சைகள் நடைபெறும்.

எஸ். தணிகாசலம்.
தலைவர்,
உதவி வித்தியாதிபதி,
வடபிரதேசம்.

கல்விக்கந்தோர்,
யாழ்ப்பாணம்,
19-4-65. 145

## நல்லூர் தொகுதி

இத் தொகுதியில் அ. இ. தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகராக அண்மையில் நடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்ட சி. அருளம்பலம் ஆகிய நான் எனக்கு வாக்களித்தவர்களுக்கும் அனுதாபிகளுக்கும், ஆதரவாளர்களுக்கும் எனக்காக பல உதவிகளும் செய்து அரும்பாடுபட்டவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இத்தொகுதி மக்களின் இன்றைய மனநிலையை நான் நன்கு அறிவேன். ஆகையால் உங்களுக்கு என்னால் இயன்ற சேவையை தொடர்ந்தும் செய்துவருவேன் என்று உறுதி கூறுகிறேன்.

சி. அருளம்பலம்,
சமாதான நீதவானும் வழக்கறிஞரும், கொக்குவில் கிராமசபைத் தலைவரும்.
20-4-65 146

## ரசிக ரஞ்சன சபா இசைவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

மாலை 5-30 — 7-00 திருவாளர் வி. வரதராஜா, திரு வி. கிருஷ்ணசாமி — கிளாரினெட், திருவாளர்கள் என். எம். சிதம்பரநாதன், பி. எஸ். சண்முகவடிவேல் — தவில், 7-00 8-15 திரு. கே. வி. தம்பு — பாட்டு, திரு. ரி. வி. பிச்சையப்பா — வயலின், திரு ஏ. எஸ். இராமநாதன் — மிருதங்கம், 8-15 — 8-30 தலைமையுரை — திரு எஸ். சிவஞானம், (காரியாதிகாரி யாழ்ப்பாணம்) 8-30 — 9-45 செல்வி கே. கௌரீஸ்வரி — பாட்டு, திரு. கே. சித்திவிநாயகம் — வயலின், திரு. வி. அம்பலவாணர் — மிருதங்கம், 9-45 — 11-00 திரு. எம். வர்ணகுலசிங்கம் — பாட்டு, திரு. ஜி. சண்முகானந்தம் — வயலின், திரு. கே. சிவபாதம் — மிருதங்கம்.


REGAL – JAFFNA
NOW SHOWING
Anthony perkins
Melina Mercourie
in
PHAEDRA


## ஊர்காவற்றுறை பட்டினசபை

### கேள்வி விளம்பரம்

ஊர்காவற்றுறை பட்டினசபையால் 1965-ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரை பின்வரும் வேலைகளுக்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கட்டற்கரையில் 4 அறை மலகூடம் அமைத்தல்.
2. சந்தையில் 2 அறை மலகூடம் அமைத்தல்.
3. கொத்திகுளம் ஜேட்டிற்குக் கற்கள் பரவி தார் போடல்.
4. பிச் ஜேட்டில் ஐறிஸ்கான் அமைத்தல்.
5. உப்புதுள ஒழுங்கைக்கு மண்போடல்.
6. அக்கை குங்கை குளத்துக்கருகில் வக்கு கட்டுதல்.
7. புளியடி ஒழுங்கைக்கு தார்போடலும், உப்புகுள பாதைக்கு கிரவல் போடலும்.

மற்றும் விபரங்களை ஊர்காவற்றுறை பட்டினசபைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வே. சிவசம்பு,
தலைவர்;

பட்டினசபைக் காரியாலயம்,
ஊர்காவற்றுறை,
22-4-65. 147

### தேவை

புகழ்பெற்ற எமது இலங்கா தயாரிப்புகளை வீட்டுக்கு வீடு விற்பனை செய்வதற்கு விற்பனைப் பெண்களும், ஓடர்கள் எடுப்பதற்கு அனுபவம் மிக்க பிரதிநிதிகளும் தேவை. நல்ல வேதனம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்: மனேஜர், இலங்கா டிபோறற்றறீஸ், உடுவில் சுன்னாகம். 78

### விற்பனைக்கு

மின்சார, குழாய்த் தண்ணீர் வசதியுள்ள 6 அறைகளைக் கொண்ட நல்ல ஒரு வீடும் அத்துடன் சேர்ந்த $2\frac{1}{2}$ பரப்புக் காணியும் ஆஸ்பத்திரி வீதியில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 476 இலக்கம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 83

### தொய்வு, சுரம், நீரிழிவு, வெள்ளை முதலிய பல

கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றுலோக் இனாம், மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியந்தனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலை சபின்னையா கோவிலடி, யாழ்ப்பாணம்.


நகைகளுக்கு
யப்பான் ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518 தந்தி: "யப்பான்"


## வரி விளம்பரம்

சிறுபிள்ளைகள் பாடசாலை (Nursery School) 3-5-65 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படும். காலை 8 மணி தொடக்கம் பதிவு செய்யப்படும், சேரும்போது ரூபா 10/- கட்டவேண்டும், பின்னும் மாதாமாதம் ரூபா 6/- கட்ட வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு பிள்ளைக்குக்கூட சேர்த்தால் முதலிலும் பணம் ஒருவருக்கு ரூபா 7-50 சதமாகும். சரஸ்வதி வித்தியாலயம், 247, பருத்தித்துறை வீதி, சங்கிலித் தோப்பு நல்லூர். 85

### விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பிலுள்ள 1 ஸ்ரீ 4000 தொடர்பிலக்கமுடைய மோட்டார் சைக்கிள் 'ஸ்ரம் மேஜர்' விற்பனைக்கிருக்கிறது. விபரங்களுக்கு: திருநாவுக்கரசு, விக்னேஸ்வர தங்க மாளிகை, கண்டி ரோட், சாவகச்சேரி 79

### சிங்கள வகுப்புகள்

சிங்கள எஸ். எஸ். சி. சித்தியடைந்த ஆசிரியையால் சிங்களம் கற்பிக்கப்படும். வகுப்பு நேரம் பகல் 1 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை. 1மணித்தியாலப் படிப்பு. மாணவருக்கு வசதிப்படி. மாதம் ரூபா 10/-. சரஸ்வதி வித்தியாலயம் 247 பருத்தித்துறை வீதி, சங்கிலிதோப்பு, நல்லூர். 84


### நம்பிக்கையில்லாப் பிரேரணை

அக்கரைப்பற்று, வெள்ளி அக்கரை பற்று தெற்கு கிராமசபை அங்கத்தவர்கள் சபைத் தலைவரில் நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை கொண்டுவருவதற்கான முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்கள். இப்போது திரு ஆர். டபிள்யு. சி. அரியநாயகம் தலைவராக இருக்கிறார்.


அதிக இலாபமடையுங்கள்
உங்கள் கால் நடைகளுக்கு, முற்றிலும் புதிய, பூரணமாக சமன் செய்த, உயரிய போஷாக்குடைய தீனை
ஹைவிட்டா மீல்
ஊட்டுங்கள்
இது உங்கள் கோழிகளுக்கு ஊட்ட உகந்த அதியுன்னத கலவையுமாகும்.
HYVITA
ஹைவிட்டா உற்பத்திப் பொருட்கள், ஜா-எல மில்ஸ், ஜா-எல.
டெலிபோன்: ஜா-எல-216. கொழும்பு-5767.



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (கொழும்பு)
நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பண்டாரவளை)
விஜிதா (ஹட்டன்) தீவொலி (துவரேலியா) ஜுபிட்டர் (குருநாகலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30


எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் சங்கங்களின் மேதின ஏற்பாடு

14 தொழிற்சங்கங்களைக் கொண்ட தொழிற்சங்கங்களின் கூட்டுக்கமிட்டி மே தினத்தை ஒன்றாகக்கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளதாக அறியப்படுகிறது.

கமிட்டியின் இணைக்காரிய தரிசிகள் திரு. என். சண்முகதாசன், திரு. பிறின்ஸ ராஜசூரியா ஆகியோரே இவ்விதம் ஒன்றுசேர்ந்து மே தினத்தைத் கொண்டாட முயற்சி மேற்கொண்டுள்ளார்கள், இவ்விதம் இணைந்து மே தினத்தைக் கொண்டாடு முகமாக பின்வரும் தொழிற் சங்கங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க குமாஸதாக்கள் சேவைச் சங்கம், இலங்கை பம்பலப்பிட்டி, வெங்கிவர்த்தகர்சங்கம், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ, இலங்கை வர்த்தக தொழிற்சங்கசம்மேளனம், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீலங்காஜாதிக குருசங்கமயா, இலங்கை தொழிற்சங்கங்களின் மத்திய கவுன்சில், அரசாங்கபொதுச் சேவை தொழிலாளர்தொழிற் சங்க சம்மேளனம், அகில இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம், அரசாங்கதொழில் நுட்ப ஊழியர் சம்மேளனம், இலங்கை தொழிலாளர் சம்மேளனம் அரசாங்க ஊழியர் தொழிற் சங்க சம்மேளனம், அரசாங்க பொதுச்சேவைச் சங்கம்,

# வகுப்புவாத பேச்சுக்கு மஜீத் கண்டனம்

கொழும்பு, வெள்ளி

"சிறுபான்மைச் சமூகத்தினரின் பிரச்னைகளைத் தீர்க்க அரசாங்கம் எடுக்கும் எந்த நடவடிக்கைகளுக்கும் நான் பூரண ஆதரவளிப்பேன்" என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவரும் மூதூர்த்தொகுதி இரண்டாவது எம். பி.யுமான ஜனாப் ஏ. எல். ஏ. மஜீத் இன்று பார்லிமெண்டில் திடீரெனக் கூறியபோது எதிர்க்கட்சியினர் திகைத்து மௌனமாக இருந்தனர்.

ஜனாப் மஜீத் மேலும் பேசுகையில், தமது கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் வகுப்புவாதத்தைக் கிளப்பிவிடும் முறையில் பேசியதைக் கேட்டு வருத்தமடைவதாகக் கூறிய போது அரசாங்கக் கட்சியினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்,

"இந்நாட்டில் சிங்கள பௌத்தர்கள்தான் இருக்க வேண்டுமா? சிங்கள பௌத்த அரசாங்கம்தான் இங்கு இருக்கவேண்டுமா? இது நாறு வலப்பனை எம், பி. யின் விருப்பம்?" என்று ஜனாப்மஜீத் கேட்டார்.

காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநாயக்காவின் கொள்கைகளைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்பவர்கள் அந்தக்கொள்கைகளுக்கு மாறாக நடந்துகொள்கின்றார்கள் என்றும் ஜனாப்மஜீத் கூறினார்.

"இந்நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களின் பிரச்னைகளை நியாயமான முறையில் தீர்த்து வைக்க தேசிய அரசாங்கம் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் நான் எனது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிப்பேன்" என்று ஜனாப் மஜீத் கூறினார். இதே வேகத்தில் அவர் மேலும் பேசுகையில் தாம் சார்ந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த சிலர், குறிப்பாக வலப்பனை எம். பி., இந்த விவாதத்தின் போது வகுப்பவாதத்தைக்கிளப்பும் வகையிலேயே பேசியது வருத்தமளிக்கிறதென்றும் கண்டிக்கத்தக்கதென்றும் கூறினார்.

ஜனப்பிரதிநிதிகள் சபை இன்றுகாலை சபாநாயகர் சேர் அல்பர்ட் எப், பீரிஸ் தலைமையில் மீண்டும் கூடியபொழுது சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

எதிர்க்கட்சியிலுள்ள சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒரேயொரு பிரதிநிதியான மூதூர் இரண்டாவது எம், பி. ஜனாப் ஏ. எல். ஏ. மஜீத் இன்று பேசினார். ஜனாப் மஜீத் பேச்சு எதிர்க்கட்சியினரைத் திகைப்பிலும் அரசாங்கக் கட்சியினரை மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியது.

சிறுபான்மை மக்களின் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க முன்வரும் அரசாங்கமே நீண்டகாலம் ஆட்சிசெய்யும்.

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகளுக்கு எச்சரிக்கையாக ஒன்று சொல்லிவைக்கவிரும்புகிறேன், பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்தை அமுல்நடத்தவிடாது அதைக் கிழித்தெறிவதற்கு முழுமுதல் காரணமாக இருந்தது ஐக்கிய தேசியக்கட்சியென்பதை மறந்துவிடக்கூடாது. தேசிய அரசாங்கத்தினர் சிறுபான்மையினர் விஷயமாக புதிய கொள்கையெதையும் கடைப்பிடிப்பதானால் தமிழர்களுடன் சிங்களத்தில் தொடர்புகொள்வதை நிறுத்திக்கொள்ளவேண்டும். இ போ சவிலிருந்து சிங்களத்தில் ஒரு கடிதம் வந்தது. அதன் தலையும் விளங்கவில்லை வாலும் விளங்கவில்லை என்றும் திரு மஜீத் குறிப்பிட்டார்.

## பதவிக்காலம் முடியும் செனட்டர்கள்

யாழ்ப்பாணம், சனி

செனட்சபைத்தலைவர் திரு. தொமஸ அமரசூரியாவும் அண்மையில் பதவியேற்ற செனெட்டர்கள் திரு. கே. பி. ஒபயசேகரா, திரு. எம். கே. திருச்செல்வம், திரு. எஸ். எம். அப்புஹாமி உட்பட பின்வரும் மற்று செனட்டர்களின் பதவிக்காலம் 1965 அக்டோபரில் முடிவடைகிறது,

தெரிவுசெய்யப்பட்ட செனற்சபை உறுப்பினர்கள் ஐவர், திருவாளர்கள் ஜே பி. ஜெயசேன, டி. பி. டி. சொய்ஸா, எஸ. நடேசன், ர. ரெஜி பெரேரா, எஸ், எம், அப்புஹாமி,

நியமனம் செய்யப்பட்ட செனற்சபை உறுப்பினர் ஐவர்— திருவாளர்கள் ஜே. ஏச். வி. எஸ. ஜெயவிக்கிரம, கே. ஆதாமலி, தோமஸ அமரசூரியா, எம். திருச்செல்வம், ஜே. பி. ஒபயசேகரா.

காலியாகும் ஸதானங்களுக்கான தெரிவும் நியமனமும் எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் நடைபெறும். தொடர்ந்து புதிய செனட்சபைத்தலைவரும் தெரிவுசெய்யப்படுவார்.

## தேசிய சுவீப்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 94-05 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 05 G 0720 | 01 M 0397 | 02 C 0106 |
| 05 L 0815 | 08 V 0157 | 05 D 0831 |
| 07 C 0421 | 05 G 0100 | 04 H 0970 |
| 03 U 0569 | 06 D 0861 | 03 B 0548 |
| 02 W 0454 | 05 R 0008 | 03 Z 0688 |
| 01 L 0717 | 06 Y 0363 | 01 X 0365 |
| 06 B 0365 | 05 F 0983 | 02 Q 0515 |
| 03 Q 0050 | 04 Z 0307 | 04 O 0503 |
| 04 L 0387 | 02 W 0484 | 08 U 0079 |
| 01 U 0337 | 08 O 0212 | 04 F 0361 |
| 04 H 0959 | 03 O 0864 | 07 R 0216 |
| 02 X 0057 | 06 H 0570 | 02 D 0782 |
| 07 V 0178 | 05 X 0173 | 03 O 0333 |
| 03 U 0601 | 06 Q 0533 | 07 C 0641 |
| 03 M 0090 | 03 V 0971 | 08 H 0182 |
| 01 B 0940 | 08 D 0236 | 06 U 0552 |
| 07 L 0644 | 05 A 0615 | 08 D 0959 |
| 01 Z 0265 | 08 W 0254 | 03 Q 0479 |
| 01 S 0871 | 08 L 0777 | 01 A 0088 |
| 05 C 0708 | 04 L 0828 | 02 L 0228 |
| 03 T 0580 | 07 B 0239 | 08 V 0271 |
| 05 F 0899 | 07 S 0899 | 07 N 0168 |
| 04 F 0315 | 03 P 0212 | 05 E 0779 |
| 05 O 0298 | 06 W 0596 | 05 H 0178 |
| 11 S 0163 | 04 H 0279 | 03 A 0682 |
| 02 V 0914 | 07 S 0555 | 05 Q 0847 |
| 06 N 0148 | 11 K 0923 | 03 H 0929 |
| 08 M 0243 | 05 L 0829 | 07 N 0472 |
| 03 O 0034 | 01 F 0393 | 08 Y 0049 |
| 05 O 0995 | 01 W 0524 | 04 W 0896 |
| 05 J 0983 | 07 Z 0041 | 03 U 0619 |
| 06 P 0826 | 03 S 0820 | 03 T 0634 |
| 11 Q 0074 | 04 A 0906 | 07 A 0572 |
| | 08 G 0041 | |

# "சிங்களத்தில் எழுதி தமிழருக்கு தொல்லை"

## பார்லிமெண்டில் பண்டிதர் இரத்தினம் கன்னிப் பேச்சு

கொழும்பு, வெள்ளி

ஜனப்பிரதிநிதிகள் சபையின் இன்றைய கூட்டத்தில் சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கிளி



நொச்சி எம் பியும் தமிழரசுக் கட்சி அங்கத்தவருமான பண்டிதர் கா பொ இரத்தினம் தமது கன்னிப்பேச்சை நிகழ்த்தினர்

தமிழ்பேசும் மக்களுக்கு அவர்கள் புரியாத சிங்கள மொழியில் அரசாங்க இலாகாக்கள் கடிதங்கள், பத்திரங்கள் அனுப்புவதையும் அதனல் அவர்கள் அனுபவிக்கவேண்டிய கஷ்டங்களையும் பற்றி பண்டிதர் இரத்தினம் விளக்கிக் கூறி இவ்விதமான செயல் பெரிதும் வருந்தத்தக்கதென்ருர், சமீபத்தில் கூடத் தமக்கு சிங்களத்தில் ஒரு கடிதம் வந்ததாக அவர் கூறுயபொழுது எதிர்க்கட்சியினர்குறுக்கிட்டுபுதிய அரசாங்கம் வந்தபின்பா, அதற்கு முன்பா முன்பா என்று கேட்டனர். "பழைய அரசாங்க நிர்வாகம் தான் அப்படி அனுப்பியது" என்று பண்டிதர் இரத்தினம் கூறினர்.

மொழிப்பிரச்னையைப் பற்றி விரிவாக விளக்கிக் கூறிய கிளிநொச்சி எம் பி காலஞ்சென்ற பிரதமரின் கொள்கைகளை அவரைப் பின்பற்றுவதாகச் சொல்பவர்கள் பின்பற்றவில்லை என்ருர்

## தேசிய அரசா..:

(1-ம் பக்க தொடர்ச்சி)

நன்குக்கு நல்லெண்ணமும். பரஸ்பரமும் நிரம்பிய சுபீட்சமான நாட்டை உருவாக்கும் பெரும் பணி எனக்கு கிடைத்திருப்பதையிட்டுபெரு மகிழ்ச்சியடைகிறேன், எனது பணியை திருப்திகரமான முறையில் செய்வேன் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு"

## வெற்றி தோல்வி இல்லை

சுழிபுரம், வெள்ளி

சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகக் கோஷ்டியினருக்கும் வட்டுக் கிழக்குக் கலாவிருத்திச் சங்கக் கோஷ்டியினருக்கும் சிநேகபூர்வமாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வெற்றி தோல்வியின்றி ஆட்டம் முடிவடைந்தது. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் போட்டி நடைபெற்றது.

## 221 யு: எஸ: விமானங்கள் பலி!

ஹாங்கொங், ஏப் 28

இதுவரை 221 அமெரிக்க விமானங்களை சுட்டு வீழ்த்திருப்பதாய் வட வியட்னும் கூறுவதாக,நவ சீன செய்தி ஸதாபனம் அறிவித்திருக்கிறது.

## "யங்லயன்ஸ்" மீண்டும் வெற்றி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் 'யங்லயன்ஸ' விளையாட்டுக் கழகத்துக்கும், யாழ்ப்பாணம் 'சென், பீற்ரஸ்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் யங்லயன்ஸ் இனிங்ஸாலும் 38 ரன்களாலும் வெற்றிபெற்றது.

சதிவழக்கு

## முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர்

லண்டன், ஏப்ரல் 28

பிரிவிகவுன்சிலில் சதிவழக்குக் குற்றவாளிகள் செய்துகொண்டுள்ள அப்பீலில் முடிக்குரிய தரப்பில் திரு. ஜியோபிறே லோறன்ஸ் கியூ சி. ஆஜராவார் என அறியப்படுகிறது

## பிரசவவிடுதி

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராமசபை எல்லைக்குள் ஓர் பிரசவவைத்தியசாலை அவசியம் திறக்கப்படவேண்டும் என்பதை சுட்டிக்காட்டி சுகாதார அமைச்சருக்கு ஒரு மகஜரை சுழிபுரம் கிராமசபையினர் அனுப்பியுள்ளனர்.

## ஒரே நாளில் 1150 தொன்!

யாழ்ப்பாணம், சனி

ஆஸ்திரேலியாவிலிருந்து வந்து 'பசிபிக் பறீஸ்' என்ற கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தில் கடந்த நான்கு நாட்களாக மாவு இறக்குமதி செய்கிறது. சென்ற வியாழக்கிழமை மட்டும் 1150 தொன் மாவை 600 தொழிலாளர்கள் இறக்கினர்கள். மாவு மூட்டையை தலையில் தூக்கிக்கொண்டு நெஞ்சளவு தண்ணீரில் நடந்து சென்றே தொழிலாளர்கள் மாவை இறக்கவேண்டிய கஷ்டநிலையிலுள்ளனர், எனினும் ஒரே நாளிலேயே இவ்வளவு 1150 தொன் மாவை இறக்கி ... திறமையை நிலை நாட்டினர்கள்.

## நன்றிதெரிவிக்கும்

(1ம்-பக்க தொடர்ச்சி)

செய்யவேண்டுமெனக் கோரும் திருத்தப் பிரேரணையை எதிர்க்கட்சியினர் வாபஸ செய்தனர். கைலஞ்ச ஊழலில் கண்டுபிடிக்கப்படுபவர்களுக்கு அடிப்படைஉரிமைகளை. வழங்காதிருக்கநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதா பிரதமர் திருடட்லிதனதுபேச்சில் தெருவித்தார் இதைத் தொடர்ந்து திரு ஆர்ஜி,சேனநாயக்கா 9வதுதிருத்தப் பிரேரணையை வாபஸ பெறுவதாக அறிவித்தார்,

வாக்கெடுப்பு முடிந்ததும் நன்றிதெரிவிக்கும் பிரேரணையை. அதைபிரேரித்த ஹேவஹெட்டா எம், பி, திரு எம். ஏ, டானியல் அப்புகாமியும், கோப்பாய் தொகுதி எம், பி திரு சி, கதிரவேற்பிள்ளையும் கவனர் ஜெனரலிடம் கையளிப்பார்கள் என சபைத்தலைவர் தெரிவித்தார், திரு சி. பி. டி சில்வா இவ்விதம்செசன்னதும் அவர்களை தக்க பாதுகாப்புடன் அனுப்பவேண்டுமென ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன ஹாஸயமாகக் கூறினர்,

கல்முனை எம், பி, ஜனாப் காரியப்பர் எதிர்க்கட்சியை சேர்ந்த களனி எம், பி, ஆர், எஸ, பெரேரா ஆகியோர் பார்லிமெண்டுக்கு சமூகம் கொடுக்கவில்லை, திருவாளர்கள் மைத்திரிபால சேனநாயக்கா, கண்டி எம், பி.திரு ஈ. எல், சேனநாயக்கா ஆகியோர் வெளிநாடுசென்றிருக்கின்றனர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## மொழி ஒரு..

(1-ம் பக்க தொடர்ச்சி)

தீர்க்க அவர்களுக்கு விருப்பமில்லை. அந்தப் பிரச்னையைப் பிரதான அம்சமாக வைத்தே கடந்த 9 வருடங்களாக அவர்கள் ஆட்சிநடத்தினர்கள். இதனலேயே மொழிப்பிரச்னை தீர்க்கப்படவில்லை, இந்தியர் பிரச்னையைகூடத் தீர்க்க வேண்டுமென்ற தூயமனத்துடன் அவர்கள் செயலாற்றவில்லை, அல்லாவிடில் அந்தப் பிரச்னைக்கும் 9 வருடங்களில் முற்றன தீர்வுகண்டிருக்கமுடியும்,

## மரண அறிவித்தல்

பேராசிரியர்

ரி, எம், அன்ரனி

காலஞ்சென்ற டாக்டர் அன்ரனி இராசநாயகம் வைத்தியப்பிரதிநிதி திரு,அன்ரனி வின்னி ஆகியோரின் தந்தையாரும், டாக்டர் லூகஸ குசைப்பிள்ளையின் மாமனருமாகிய ஓய்வுபெற்ற கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பேராசிரியருமாகிய ரி' எம்: அன்ரனி அவர்கள் காலமாகி விட்டார், அன்னரது பூதவுடல் அவரது குருநகர் வாசஸதலத்திலிருந்து நல்லடக்கத்திற்காக சென்பற்றிக்ஸ கல்லூரிக் கருகாமையிலுள்ள சேமக்காலைக்கு இன்று (24-4-65) மாலை 4.30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும் அன்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல் கொடுப்பவர்-
அ, செபஸ்ரியன், 86

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 55-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org